1995 நவம்பர் 7] [திரு. டி.எம். செல்வகணபதி]

"1995-ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்,

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்

(முற்பகல் 11-50

7. முதல் துணை நிதிநிலை அறிக்கை, 1994-95

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 1995-96 ஆம் ஆண்டிற்கான செலவு குறித்த முதல் துணை நிதிநிலை அறிக்கை மீது மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் உரை. (குறுக்கீடு)

திரு. எஸ்.ஆர். பாலசுப்ரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவையில் துணை நிதிநிலை அறிக்கையினை வைப்பதற்கு ஆளுநர் அவர்கள் அனுமதி அளித்திருக்கிறார்கள். நீங்கள் படிக்காவிட்டாலும் அனுமதித்ததாகத்தான் நான் எடுத்துக் கொள்வேன். நேற்றையதினம் துணை நிதிநிலை அறிக்கை பேரவையிலே தாக்கல் செய்யப்பட்டிருக்க வேண்டும். நேற்றையதினம் பேரவை ஒத்திவைக்கப்பட்ட காரணத்தாலே நேற்றையதினம் தாக்கல் செய்யப்படவில்லை. அறிக்கை இன்றைய தினம் தாக்கல் செய்யப்பட இருக்கிறது... (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் ஒன்று சொல்லிவிடுகிறேன் (குறுக்கீடு). என்னுடைய அறையிலேயே நீங்கள் தெரிவித்தீர்கள். (குறுக்கீடு)

நேற்றையதினம் அது இந்தப் பேரவையில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கிறது. —புரபோசல்ஸ்— பேரவையில் வைக்கப்பட்டது. நான் இப்போது சொன்னதே அதன் மீதான நிதியமைச்சர் அவர்களுடைய உரை இப்போது வழங்கப்படுகிறது என்பதுதான். (குறுக்கீடு) நேற்றைய தினமே அந்த புரபோசல்ஸ் வைக்கப்பட்டது. (குறுக்கீடு)

THIRU S.R. BALASUBRAMONIYAN: I am not stalling.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நேற்றையதினமே தாங்கள் அதை எல்லோரும் ஒப்புக் கொள்கிறோம் என்று சொல்லியிருக்கிறீர்கள்.

திரு. எஸ்.ஆர். பாலசுப்ரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்கட்சித் தலைவர் என்ற முறையில் பேரவை விதிகளையும் அரசியல் சட்டத்தையும் சுட்டிக்காட்ட வேண்டிய கடமை எனக்கு இருக்கிறது. நான் இப்பொழுதும் உங்களிடத்தில் எதுவும் குறை காணவில்லை. குறையும் சொல்லவில்லை. நேற்றையதினம் தாக்கல் செய்யாமல் இன்றையதினம் தாக்கல் செய்வதாக இருந்தால், அரசியல் சட்டப்படியும், பேரவை விதியின்படியும்—அரசியல் சட்டம் 205-வது பிரிவின் படியும், பேரவை விதி 189-ன் படியும், பேரவையில் துணை நிதிநிலை அறிக்கை தாக்கல் செய்வது என்பது ஆளுநர் அவர்கள் குறித்த நாளில் the day appointed by the Governor என்று இருக்கிறது. ஆக, ஆளுநர் அவர்கள் நேற்றைய தினமே இங்கே அதைத் தாக்கல் செய்வதற்கு அனுமதி அளித்திருக்கிறார்கள் என்றே நான் கருதுகிறேன். இன்றையதினம் தாக்கல் செய்வதாக இருந்தால் அவர் அதற்கு தனியாக அனுமதி அளிக்காத நிலையில் தாக்கல் செய்தால் செல்லுபடியாகுமா? நாளையதினம் அது ஒரு குறையாக வந்துவிடக்கூடாது. அதை எப்படி சரி செய்வது என்று நீங்கள் சொல்லுங்கள். விளக்கத்திற்காகத்தான் நான் கேட்கிறேன். விளக்கம்கூட கொடுக்காமல், சுட்டிக்காட்டப்படாமல் பேரவையில் இதுபோன்ற ஒரு அறிக்கை வைக்கப்படுகிறது . . . (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தாங்கள் நேற்றையதினம் தெரிவித்தது. வேறு யாரும் இதைப்பற்றி பேசவில்லை என்ற ஒரு வாக்குறுதி வழங்கினீர்கள். அதை நான் சுட்டிக்காட்டுகிறேன். (குறுக்கீடு). நாங்கள் எதுவும் இந்தப் பிரச்சினை குறித்து எழுப்பவில்லை என்று நேற்றையதினம் சொன்னீர்கள். (குறுக்கீடுகள்) அலுவல் ஆய்வுக் குழுக் கூட்டத்தில் நீங்கள் தெரிவித்தது. (குறுக்கீடு) இப்போது அந்தப் பிரச்சினை வரவில்லை என்பதற்காகத்தான் நானும் சொல்கிறேன், உட்காருங்கள். இப்போது நான் சொன்னது, இங்கே சமர்ப்பிக்கப்பட்டிருக்கிற துணை நிதிநிலை அறிக்கை மீதான

உரையைதான். நேற்றையதினமே—proposals have already been placed before the House. (குறுக்கீடு) நேற்றையதினம் எல்லோர் இருக்கையிலும் இருந்தது (குறுக்கீடு) இது அவருடைய உரை. ஆகவே, அதிலே பிரச்சினை இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (குறுக்கீடு) நீங்கள் நேற்றையதினம் சொன்னீர்கள். (குறுக்கீடு) உங்களை நம்பி எதையும் செய்யமுடியாது என்பதற்கு இதுவெல்லாம் எடுத்துக்காட்டு. நேற்றையதினம் நீங்கள் தெரிவித்தது, இதைப்பற்றி யாரும் பேசமாட்டோம் என்பதுதான். ஆகவேதான், நான் சொல்கிறேன், அதிலேகூட பிரச்சினை வரவில்லை. (குறுக்கீடு) As directed by His Excellency நேற்றையதினமே இது அவையில் வைக்கப்பட்டு விட்டது. (குறுக்கீடு) அவையில் வைக்கப்பட்டு, அதன்மீது மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களுடைய உரைதான் இது. நேற்றிலிருந்தே தொடர்கிறது. (குறுக்கீடு) நேற்றிலிருந்தே தொடர்கிறது. நேற்று நாம் அவையை ஒத்திவைத்த காரணத்தாலே இந்த உரையை அவர் இங்கே வாசிக்கவில்லை (குறுக்கீடு) நேற்றையதினம் நீங்கள் கொடுத்த வாக்குறுதி என்பது எந்த அளவிற்கு காற்றிலே பறக்கவிடப்படுகிறது என்பதற்கு இவை எல்லாம் எடுத்துக்காட்டுகள். (குறுக்கீடு) நேற்றையதினம் நீங்கள்தான் தெரிவித்தீர்கள். (குறுக்கீடு) நீங்கள் சொல்கிறபடி சட்டப் பிரச்சினை எதுவும் இதிலே வரவில்லை. நேற்றையதினம் it has been placed before the House. அது சம்பந்தமான மாண்புமிகு நிதியமைச்சரின் உரைதான் இன்று எடுத்துக்கொள்ளப்படுகிறது. (குறுக்கீடு) அதற்கு மேல் இதை விவாதித்துக்கொண்டே போனால் இதில் ஏதோ பெரிய சட்டப்பிரச்சினை இருப்பதாக வெளியே தெரிவதற்கு ஏதுவாகும். அதனால்தான் வேண்டாம் என்று சொன்னேன். (குறுக்கீடு) அதிலே மேற்கொண்டு வேண்டாம். (குறுக்கீடு) நீங்கள் கேட்டீர்கள், நான் சொல்லிவிட்டேனே, (குறுக்கீடு) நீங்கள் கேட்டீர்கள் நான் சொல்லிவிட்டேன்.

முற்பகல் 11-55

திரு. எஸ்.ஆர். பாலசுப்ரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றையதினமே நான் சொன்னேன், இந்த அவையிலே அதை வைத்துவிட்டு பிறகு ஒத்தி வைக்கலாம் என்று சொன்னேன். நான் இப்போதும் எதிர்ப்பாகச் சொல்லவில்லை. சட்டச் சிக்கல்கள் வந்துவிடக்கூடாது என்பதற்காகத்தான் சொன்னேன். How to overcome it என்று தான் கேட்கிறேன். நான் வேறு ஒன்றும் சொல்லவில்லை. நான் வேண்டாம் என்றும் சொல்லவில்லை. நான் நேற்றையதினம் சொன்னேன். தாராளமாக இந்த அவையிலே அதை வைத்துவிட்டு பிறகு

ஒத்தி வைக்கலாம் என்று சொன்னேன். வேண்டாம் என்று சொல்லவில்லை. இப்போது விளக்கம்தான் கேட்கிறேன், அதற்கு நீங்கள் ஏன் இவ்வளவு கோபிக்கிறீர்கள்?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் கோபிக்கவே இல்லை. நேற்றைய தினம் நாங்கள் இதைப்பற்றிய பிரச்சினை எதுவும் எழுப்ப மாட்டோம் என்று நீங்கள்தான் சொன்னீர்கள். அப்படிச் சொல்லிவிட்டு, இன்றைக்கு நீங்கள் அதைப் பற்றிச் சொல்வதால், நான் சொல்லித்தானே ஆக வேண்டும். நீங்கள் கேட்டீர்கள், இதிலே சட்டச் சிக்கல் வராதா என்று, வராது. (குறுக்கீடு).

205(1) "The Governor shall—

(a) if the amount authorised by any law made in accordance with the provisions of Article 204 to be expended for a particular service for the current financial year is found to be insufficient for the purposes of that year or when a need has arisen during the current financial year for supplementary or additional expenditure upon some new service not contemplated in the annual financial statement for that year, or

(b) if any money has been spent on any service during a financial year in excess of the amount granted for that service and for that year, cause to be laid before the House or the Houses of the Legislature . . ."

என்றுதான் இருக்கிறது. நேற்றையதினம் அது இங்கே வைக்கப்பட்டது என்பதை நான் தெரிவிக்கிறேன்.

திரு. எஸ்.ஆர். பாலசுப்ரமணியன்: நான் உங்களுக்குத் தடையாக இல்லை.

The Rules of procedure regarding this is—"189(1): The Governor may at any time during a financial year appoint a day for the presentation of a statement of supplementary or additional expenditure under Article 205" என்றுதான் இருக்கிறது. அதைத்தான் நான் சுட்டிக்காட்டுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் 205-ஐயும்தான் சொல்கிறேன். It has already been laid on the Table of the House, yesterday itself. அதைப்பற்றி நான் இப்போது சொன்னது கூட புதிதாகச் சொல்லவில்லை.

1995 நவம்பர் 7] [பேரவைத் தலைவர்]

இங்கே வைக்கப்பட்ட அந்த நிதிநிலை அறிக்கை மீதான மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களுடைய உரை என்றுதான் இப்போது சொன்னேன். அதாவது, அதனுடைய தொடர்ச்சிதான். நேற்றைக்கு வைக்கப்பட்ட நிதிநிலைக் குறிப்புகளின் மீதான தொடர்ச்சிதான் இது.

நண்பகல் 12-00

1995-96 ஆம் ஆண்டிற்கான செலவு குறித்த முதல் துணை நிதிநிலை அறிக்கை மீது மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களின் உரை. மாண்புமிகு நிதியமைச்சர்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

1995-96 ஆம் ஆண்டிற்கான முதல் துணை மதிப்பீடுகளை இம்மாமன்றத்தின் முன் வைக்கிறேன். மானியக் கோரிக்கைகளை விளக்கிக் கூறும் விரிவான அறிக்கை இம்மாமன்றத்தில் வைக்கப்பட்டுள்ளது. இந்த மாமன்றத்தின் முன் வைக்கப்பட்டுள்ள இத்துணை மதிப்பீடு மொத்தம் ரூ. 285.39 கோடி நிதி ஒதுக்கத்திற்கு வகை செய்கிறது. இதில் ரூ. 230.41 கோடி வருவாய்க் கணக்கிலும், எஞ்சிய தொகையான ரூ. 54.98 கோடி மூலதன கடன் கணக்குகளிலும் அடங்கும்.

1995-96 ஆம் ஆண்டு வரவு-செலவு திட்டத்தைத் தாக்கல் செய்த பின்னர், சில எதிர்பாராச் செலவினங்கள் ஏற்பட்டுள்ளன. இவை இத்துணை மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்டுள்ளன. மேலும், சில அவசரச் செலவினங்களை, எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து அனுமதிக்க வேண்டியிருந்தது. எதிர்பாராச் செலவு நிதியில் இத் தொகைகளை மீண்டும் ஈடு செய்வதற்காகவே இத்துணை மதிப்பீடுகள் குறிப்பாக உள்ளன. இந்த மானியக் கோரிக்கைகளில் இடம் பெறுகின்ற சில முக்கியமான திட்டங்கள், திட்டப்பணிகள் குறித்து நான் சுருக்கமாகக் கூற விழைகிறேன்.

நடைபெற இருக்கும் ஊராட்சித் தேர்தல்கள் தொடர்பான செலவுகளுக்காக "மானியக் கோரிக்கை எண் 8 – தேர்தல்கள்" என்கிற தலைப்பின் கீழ் ரூ. 31.04 கோடி இத்துணை மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்டுள்ளது.

இம்மாநிலத்தில் கொள்ளைத் தடுப்புப் பிரிவையும், ஐந்து போதைப் பொருள் உளவுத் தகவல் பிரிவுகளையும் அமைக்க அரசு அனுமதி அளித்துள்ளது. முதற்கண் செலவு செய்வதற்காக, எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து வழங்கப்பட்ட தொகையான ரூ. 43.31 இலட்சம் "மானியக்

கோரிக்கை எண் 15—காவல்" என்கிற தலைப்பின் கீழ்ச் சேர்க்கப்பட்டுள்ளது. இம் மாநிலத்தில் கூடுதலாக 26 அனைத்து மகளிர் காவல் நிலையங்களை அமைக்கவும் அரசு முடிவு செய்துள்ளது. இதன் பொருட்டு ரூ. 33.54 இலட்சம் துணை மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்டுள்ளது.

I முதல் VIII ஆம் வகுப்பு வரையில் படிக்கின்ற பள்ளி மாணவர்களுக்கு 1995-96 ஆம் ஆண்டிற்குச் சீருடை வழங்கும் திட்டத்திற்காகக் கூடுதலாக ரூ. 16.37 கோடி தேவைப்படுகிறது. இத்தொகை துணை மதிப்பீடுகளில் "மானியக் கோரிக்கை எண் 17—கல்வி" என்கிற தலைப்பின் கீழ்ச் சேர்க்கப்பட்டுள்ளது.

சென்னையில் 1995 ஆம் ஆண்டு டிசம்பர்த் திங்களில் ஏழாம் தெற்கு ஆசிய நாடுகளின் கூட்டமைப்புப் போட்டி விளையாட்டுக்கள் நடைபெற-விருப்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் நன்கறிவர். இதன் பொருட்டு, அமைப்பு ஏற்பாடுகளைச் செய்வதற்காகும் செலவுக்குக் கூடுதலாக ரூ. 21.25 கோடி உரிய மானியக் கோரிக்கைகளின் கீழ்த் துணை மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்டுள்ளது.

அனைத்து அரசுப் பணியாளர்கள், ஆசிரியர்கள், உள்ளாட்சி அமைப்புகள், அரசு மானிய உதவி பெறுகின்ற கல்வி நிலையங்களில் பணிபுரிகின்ற ஆசிரியர்கள், பிற பணியாளர்கள், மற்றும் சில்லறைச் செலவுகள் மூலம் ஊதியம் பெறுகின்ற முழுநேர, பகுதிநேரப் பணியாளர்களுக்கும், அரசுப் பணியின்கீழ் வராத வேலை நிதி ஊதியம்பெறுகின்ற பணியாளரமைப்பிற்கும், இடைக்கால நிவாரணத் தொகைகளின் இரண்டாம் தவணைத் தொகையை வழங்க அரசு அனுமதி அளித்துள்ளது. மேலும், பல்கலைக்கழக மானியக் குழுவால் வரன்முறைப்படுத்தப்பட்டுள்ள அரசு மற்றும் மானிய உதவி பெறுகின்ற கல்லூரிகள் மற்றும் பல்கலைக் கழகங்களில் பணிபுரிகின்ற ஆசிரியர் மற்றும் ஆசிரியர் அல்லாத பிற பணியாளர்களுக்கும், முறையே 1-1-94 முதலும் 1-10-95 முதலும் முதலாம், இரண்டாம் தவணைத் தொகைகளை வழங்கவும் அரசு அனுமதி அளித்துள்ளது. முதற்கண் செலவு செய்வதற்காக, எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து ரூ. 25.00 கோடி மற்றும் ரூ. 5.30 கோடி என இரண்டு முன்பணங்கள் வழங்கப்பட்டுள்ளன. தேவைப்படும் தொகை சம்பந்தப்பட்ட மானியக் கோரிக்கைகளில் சேர்க்கப்பட்டுள்ளன.

கிராம நியாய விலைக் கடைகளுக்கு உதவித் தொகை வழங்கும் வகையில், கூடுதலாக, ரூ. 4.63 கோடி தேவைப்படுகிறது. இத்தொகை "மானியக் கோரிக்கை எண் 23 – கூட்டுறவு" என்கிற தலைப்பின் கீழ்த் துணை மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்டுள்ளது.

1995 நவம்பர் 7] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

கிராமப் பஞ்சாயத்துகளில் கூடுதலாக 20,000 தெரு விளக்குகளைப் பொருத்துவதற்கென அரசு முடிவு செய்துள்ளது. "27 – ஊரக வளர்ச்சி மற்றும் 30 – பழங்குடியினர், ஆதிதிராவிடர் முதலியோர் நலன்" என்கிற மானியக் கோரிக்கைகளின் கீழ் ஒவ்வொன்றிலும் ரூ. 3 கோடி வீதம் மொத்தம் ரூ. 6 கோடி, இத்துணை மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்டுள்ளது. பேரூராட்சிகளில் அடிப்படை வசதிகள் அமைப்பதற்காகத் தேவைப்படுகின்ற ரூ. 25.00 கோடி துணை மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்டுள்ளது.

முன்னாள் இந்திய தேசிய இராணுவ வீரர்கள் உட்பட சுதந்திரப் போராட்ட வீரர்களுக்குரிய உதவித் தொகையை திங்களொன்றுக்கு ரூ. 1,000-லிருந்து ரூ. 1,500 ஆகவும், அவர்களைச் சார்ந்துள்ளவர்களுக்குரிய உதவித் தொகையை மாதமொன்றுக்கு ரூ. 500-லிருந்து ரூ. 750 ஆகவும் 1-9-95 முதல் அரசு உயர்த்தியுள்ளது. இதன் பொருட்டுத் தேவைப்படுகின்ற ரூ. 1.52 கோடி துணை மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்டுள்ளது.

மாவட்டத் தொழில் வளர்ச்சி மையங்கள் மூலமாக சிறு தொழில் வளர்ச்சிக்கு உதவித் தொகை வழங்குவதற்காக, அரசு ரூ. 16.46 கோடி அனுமதித்துள்ளது. இதன் பொருட்டு கூடுதலாகத் தேவைப்படும் தொகை ரூ. 8 கோடி துணை மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்டுள்ளது. கங்கைகொண்டான், பெருந்துறை ஆகிய இடங்களில் வளர்ச்சி மையங்களை அமைக்கும் வகையில் ரூ. 15.80 கோடி அனுமதிக்கப்பட்டுள்ளது. இத்தொகை துணை மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு குடிநீர் வழங்கல் வடிகால் வாரியம் பல்வேறு குடிநீர் வழங்கல் திட்டங்களை நிறைவேற்றுவதற்கு ரூ. 25 கோடி கூடுதல் நிதி ஒதுக்கம் செய்ய அரசு முடிவு செய்துள்ளது. "மானியக் கோரிக்கை எண் 48 – குடிநீர் வழங்கல்" என்பதன் கீழ் ரூ. 24.00 கோடி மானியமாகவும் "மானியக் கோரிக்கை எண் 61 – மாநில அரசு வழங்கும் கடன்களும் முன்பணங்களும்" என்பதன் கீழ் மீதம் ரூ. 1 கோடி கடனாகவும் துணை மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்டுள்ளது.

பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த நாளைக் கொண்டாடும் வகையில், அவருடைய இலக்கியப் படைப்புகளை நாட்டுடைமையாக்க அரசு முடிவு செய்துள்ளது. இது குறித்து வழங்கப்படும் தொகை குறித்து முதற்கண் செலவு செய்ய எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து ரூ. 75 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. இத் தொகை "மானிய கோரிக்கை எண் 51 – தமிழ் வளர்ச்சி – பண்பாடு" என்கிற தலைப்பின் கீழ்த் துணை மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்டுள்ளது.

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1995 நவம்பர் 7

தமிழ்நாடு தோல் வளர்ச்சி நிறுவனத்திற்கு மூலதனப் பங்குத் தொகையாகத் தொழிற்சாலைக் கழிவுகளைச் சுத்திகரிக்கும் பொதுவான நிலையங்களை அமைக்கும் பொருட்டு ரூ. 2.68 கோடி கூடுதலாக வழங்கப்படுகிறது. இத்தொகை "மானியக் கோரிக்கை எண் 53 – தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு" என்கிற தலைப்பின் கீழ்த் துணை மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின் கீழ்ப் பேருந்துகளை வாங்குவதற்குரிய நிதியுதவியாக பல்லவன் போக்குவரத்துக் கழகத்திற்கு ரூ. 24.40 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. முதற்கண் செலவு செய்ய, எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து வழங்கப்பட்டுள்ள இத்தொகை "மானியக் கோரிக்கை எண் 61 – மாநில அரசு வழங்கும் கடன்களும், முன்பணங்களும்" என்கிற தலைப்பின்கீழ் துணை மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்டுள்ளது.

இத்துணை மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்டுள்ள செலவினங்களின் முக்கிய அம்சங்கள் குறித்து இங்கு நான் சுருக்கமாகக் குறிப்பிட்டுள்ளேன். இவை குறித்தும், ஏனைய இனங்கள் குறித்தும், உரிய முழு விவரங்களும் இப்பேரவையில் வைக்கப்பட்டுள்ள விளக்கக் குறிப்பில் * விரிவாக இடம் பெற்றுள்ளன. இத்துடன், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1995-96 ஆம் ஆண்டிற்கான முதல் துணை மதிப்பீடுகளை இம்மாமன்றம் ஏற்று இசைவளிக்குமாறு வேண்டுகிறேன்.

வணக்கம்.

பிற்பகல் 12-05

8. அறிவிப்புகள்

(அ) முதல் துணை நிதிநிலை அறிக்கை, 1994-95- வெட்டுத்தீர்மானங்கள் அளித்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 1995-96 ஆம் ஆண்டுக்கான செலவு குறித்த முதல் துணை நிதிநிலை அறிக்கையில் கண்டுள்ள மானியக் கோரிக்கைகள் மீது வெட்டுத் தீர்மானங்கள் கொடுக்க விரும்பும் உறுப்பினர்கள் அவற்றைப் பேரவையில் 190-வது விதிக்கிணங்க 8-11-1995, புதன்கிழமை, மாலை 3.00 மணிக்குள் பேரவைச் செயலகத்தில் சேர்ப்பிக்கலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்..

---

* 6-11-1995ஆம் நாளன்று அவையில் வைக்கப்பெற்றது.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS